விலை சதம் 50 ★ பக்கங்கள்—8

ஈழநாடு வார மலர்

THE EELANAADU VAARAMALAR

மலர் 20 மாசி 21 ரபீஉல் அவ்வல் 24 ஞாயிற்றுக்கிழமை [5—3—78] இதழ் 23



மகா சிவராத்திரி
திருக்கேதீஸ்வரம்
சிவன் ராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்களின் நலன் கருதி
விஷேச வாகன சேவை
புறப்படுதல் :
7·3 78 காலை 9 மணி
திரும்புதல் :
8-3-78 மாலை 2 மணி
தொடர்பு கொள்ளவும்.
லக்ஷ்மி டூர்ஸ்
2வது மாடி,
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



திருக்கேதீஸ்வரத்தில்
சகாய விற்பனை
மகாசிவராத்திரி அன்று மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் கோவில் வீதியில் எமது விளம்பர விற்பனை வாகனத்தில் சகாயவிற்பனை நடைபெறும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்துச் சிறந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்


சன்சோனி கமிஷன் விசாரணை:

# “பறைத் தமிழருக்கு இரத்தம் கொடுக்கவேண்டாம்”

## அனுராதபுரம் ஆஸ்பத்திரி ஊழியர் கூறினராம்

### செட்டிகுள ரயில்நிலைய அதிபரின் விதவைமனைவி கண்ணீருடன் சாட்சியம்

நமது நிருபர் கா. யோகநாதன்-
(யாழ்ப்பாணம்)

**அனுராதபுரம் ரயில் நிலயத்தில் குண்டர்களால் தாக்கப்பட்ட என் கணவரை அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றபோது சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டனர்.**

**டாக்டர் ஒருவர் வந்து அவரின் உயிரை காப்பாற்ற உடனடியாக இரத்தம் தேவை என்று கூற, அங்கு நின்ற ஆஸ்பத்திரி ஊழியர்கள் 'பறைத் தமிழருக்கு இரத்தம் கொடுக்கவேண்டாம்' என்று கூறி தடுத்துவிட்டனர்**

**அவசரமாக அவரை காரில் யாழ்ப்பாணம் கொண்டுவந்தபோதும் ஊரடங்குச் சட்டம் இருந்ததால் உடனடியாக சிகிச்சை அளிக்க முடியவில்லை.**

**மறுநாள் மூச்சுவிடக் கஷ்டப்பட்ட அவர் எங்களை அனாதைகளாக விட்டுச்சென்றுவிட்டார். உடனடியாக இரத்தம் கொடுத்திருந்தால் அவரைக் காப்பாற்றியிருக்கலாம் என டாக்டர் கூறினர்.**

ஆகஸ்ட் கலவரத்தின்போது அனுராதபுரம் ரயில் நிலயத்தில் குண்டர்களின் தாக்குதலுக்குப் பலியான செட்டிகுளம் ரயில் நிலய அதிபரின் மனைவியான திருமதி பத்மாவதி நடராசா (48 வயது) சன்சோனிக் கமிஷன் முன் நேற்று சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினர்.

**அழுதுகொண்டே**

திருமதி நடராசா அழுது கொண்டே சாட்சியமளித்தார். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. சொற்கள் வெளிவராமல், நாவரண்ட நிலையில் திருமதி நடராசா கூறியதாவது; என் கணவர் செட்டிகுளம் ரயில் நிலய அதிபராக கடமையாற்றினர் நாங்கள் ரயில்நிலய விடுதியில் தங்கியிருநதோம் அவர் 17-ம் தேதி காலையில் அனுராதபுரத்திற்கு ஒரு அலுவலாகச்சென்ருர். அவர் திரும்பிவரவில்லை. மறுநாள் ஒரு தகவல் கிடைத்தது. என் கணவர் குண்டர்களால் தாக்கப்பட்டு அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக புகையிரதநிலயசுப்பிரிண்டன் அறிவித்திருந்தார்

பின் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். செட்டிகுளம் அரசாங்க அதிபர் அவரை அங்கு கண்டு தமது ஜீப்பில் செட்டிகுளம் கொண்டுவந்தார். அவர் எங்களுடன் இருப்பதை விரும்பினுர் ஏனெனில்நாங்கள் அனாதரவற்றவர்களாக இருந்தோம்.

**உடம்பெங்கும் காயங்கள்**

அவருக்கு உடம்புள்ளிகும் பல காயங்கள்காணப்பட்டன. தலையில், நெற்றியில், நெஞ்சில், கால்களில் எங்குமே காயம் காணப்பட்டது கடும் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தார்.

அவரிடம் "எப்படித் தாக்கப்பட்டீர்கள்" என்று கேட்டேன். அனுராதபுரம் ரயில் நிலய அறையில் தங்கியிருந்தபோது குண்டர்கள் தாக்கியதாகக் கூறினர். ரயில்நிலய அதிபர் சதாசிவம் செல்லத்துரை மற்றும் பல தமிழ் உத்தியோகத்தர்கள் இருந்ததாகவும் கூறினர்,

17ந் தேதி இரவு குண்டர்கள் வந்து தாக்கியதாகவும், வாள், கத்தி, கொட்டன் கொண்டுவந்ததாகவும் கூறினர் கட்டிலுக்குக் கீழ் தாங்கள் பதுங்கியிருந்ததாகவும் குண்டர்கள் ஒவ்வொரு கட்டிலாகத் தூக்கித் தங்களைத் தாக்கியதாகவும் அவர் சொன்னர். அச்சமயத்தில் தான் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் சொன்னர். அதன் பின் காவலுக்கு நின்ற பொலிஸார் வந்ததாகவும் கூறினர்.

**சிகிச்சையளிக்க மறுத்தனர்**

தன் கணவரை இராணுவத்தின்ர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அவசரமவசரமாகக் கொண்டுபோனபோது அங்கு சிகிச்சையளிக்க மறுத்துவிட்டார்களென்றும் கூறினர். டாக்டர் ஒருவர் உடனடியாக இரத்தம் வேண்டுமெனக் கூறியபோது ஆஸ்பத்திரி ஊழியர்கள் 'பறைத் தமிழருக்கு' இரத்தம் கொடுக்கவேண்டாமென்று கூறியதாகவும் என் கணவர் சொன்னர்.

ஆஸ்பத்திரி வார்ட்டுக்குள்ளும் குண்டர்கள் வந்து சிகிச்சை அளிக்கவேண்டாம் எனத் தொந்தரவு கொடுத்தார்களென்றும் பின் உத்தியோகத்தர் ஒருவர் தன்னை அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமது பேரப்பிள்ளை பற்றி கண்டியில்வியட்நாம்பிரதமர்

(கண்டி)

வியட்நாம் பிரதமர் திரு பாம் வான் தொங் நேற்று பேராதனை பூங்காவில் ஒரு காலி மரம் ஒன்றை நாட்டிய போது விவசாயக் காணி அமைச்சர் திரு ஈ எல் சேனநாயக்காவுடன் நிகழ்த்திய உரையாடலில் தமது பேரப்பிள்ளைபற்றி நகைச்சுவையுடன் கூறினர்

திரு தொங் தாம், இங்கு நாட்டிய மரம் எவ்வளவு காலத்தில் வளரும் என்று திரு ஈஎல் சேனநாயக்காவிடம் கேட்டபோது அவர், "உங்கள் பேரப்பிள்ளை வியட்நாம்பிரதமராக இங்கு வரும்போது பெரிய மரமாக வளர்ந்திருக்கும்" என்று கூறினர்.

இதற்குப் பதில் அளித்த தொங், தமது பேரப்பிள்ளை பிரதமராக அல்ல, சாதாரண பிரசையாகவே இங்கு வருவார் என்று கூறினர்

பொல்கொலை மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு விஜயம் செய்த திரு தொங் இத்திட்டம் வெற்றி அளித்தபின் தமது நாட்டுக்கும் நெல்லை அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொண்டார் (ம-இ)

## இராசுவைச் சந்திக்க இன்று கூட்டணிக்குழு செல்கிறது

(கொழும்பு)

மட்டக்களப்பு எம். பி.திரு. செ. இராஜதுரையின் இன்றைய நிலைபற்றி அறிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவினுல் நியமிக்கப்பட்ட விசேட எம்.பிக்கள் குழு இன்று மாலை மட்டக்களப்புக்குப் பயணமாகிறது.

திருகோணமலை எம் பி திரு இரா சம்பந்தன் தலைமையில் திருவாளர்கள் வி யோகேஸ்வரன், பி எஸ் சூசைதாசன், ரி இராஜலிங்கம் ஆகியோர் கொண்ட இக் குழு கொழும்பிலிருந்து மட்டக்களப்புசெல்கிறது. (கி-இ)


அம்புஷ் 25

வெங்காயம்-மிளகாய்

பயிர்களை தாக்கும் புளுக்களை

கட்டுப்படுத்த வல்ல

சக்திவாய்ந்த கிருமிநாசினியாகும்.

4000 கன்றுகளுக்கு போதுமான

2 அவுன்ஸ் (50ML) அம்புஷ்

கிருமிநாசினியின் விலை:
ரூபா 35-40 சதம் மட்டுமே

மேலதிக விபரங்கட்கு:

தரோரு லிமிட்டெட்,

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651



கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர தேவஸ்தான

அன்னதானசபை

## அறிவித்தல்

சிவராத்திரி காலத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க விரும்புபவர் அன்னதான சபையுடன் தொடர்புகொள்ளுமாறு பணிக்கப்படுகின்றனர்.

அரிசி, மரக்கறி வழங்குபவர்கள் 7-3-78 க்கு முன் தேவஸ்தானத்தில் வழங்கவும். அனுப்புபவர்கள் மு. சின்னத்துரை, பொருளாளர், நகுலேஸ்வர தேவஸ்தானம், கீரிமலை என குறிப்பிடவும்.

அன்னதானசபை

8681


## அறிவித்தல்

### வல்வெட்டித்துறை நகரம் வல்வெட்டித்துறை.

### 15-03-1978ம் திகதி தொடக்கம் 31-12-1978ம் திகதி வரை

### குத்தகை ஏலவிற்பனை

வல்வெட்டித்துறை ஆட்டிறைச்சிக்கடை, தொண்டமானாறு மீன்சந்தை ஆகியவற்றிற்கான மேற்குறிப்பிட்ட காலவரைக்கான குத்தகை ஏலவிற்பனை அவ்வவ்ஸ்தலங்களில் வைத்து 10-03-1978ந் திகதி வெள்ளிக்கிழமை கீழ்க்காணும் விபரப்படி பகிரங்க ஏலத்தில் விநகப்படும்.

[1] ஆகக்கூடிய கேள்விக்காரர் கேள்விப் பணத்தின் 25% வீதப்பணத்தை ஸ்தலத்திலேயே விசேட ஆணையாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

[2] சபைக்கு எந்தவிதமான கொடுப்பனவுமுள்ள கடனாளிகள், முன்பு குத்தகை எடுத்து முறையாக நடத்தத் தவறியவர்கள். விலைக்கட்டுப்பாட்டதிகாரி அவர்களால் தண்டிக்கப்பட்டவர்கள் இந்த ஏலத்தில் பங்குபற்றுவதற்கு அருகதையற்றவராவார்.

[3] குத்தகையைப் பாரமெடுப்பவர் விசேட ஆணையாளருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

[4] ஒப்பந்த நிபந்தனைகளையும், மற்றும் விபரங்களையும் அலுவலக நேரத்தில் நேர்முகமாக இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| ஏலம் கூறப்படும் இடம் | திகதி | நேரம் |
|---|---|---|
| 1. வல்வெட்டித்துறை ஆட்டிறைச்சிக்கடை | 10-3-78 | மு.ப. 10-00 மணி |
| 2. தொண்டமானாறு மீன்சந்தை | 10-3-78 | மு.ப. 10-30 மணி |

ஜீ. எஸ். கந்தசாமி,
விசேட ஆணையாளர்,
வல்வெட்டித்துறை நகரம்-வல்வெட்டித்துறை.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை.
01-03-1978.

8670

நகரசபை, சாவகச்சேரி

## இறைச்சிக்கடைகள் குத்தகைக்கான கேள்விப்பத்திர அறிவித்தல்,

1-4-78 முதல் 31-12-78 வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக் கடைகளில் வியாபாரம் நடத்தும் உரிமையின் குத்தகைக்கான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளாக 17-3-78 பிற்பகல் 4-45 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| வியாபாரம் | கேள்வி வைப்புப்பணம் | படிவக்கட்டணம் |
|---|---|---|
| 1. மாட்டிறைச்சிக்கடை இல. எல். பியூ. 4 சந்தை, சாவகச்சேரி | ரூ. 100-00 | ரூ. 10-00 |
| 2. ஆட்டிறைச்சிக் கடை இல. என் எம்.எஸ். 3 சந்தை, சாவகச்சேரி | ரூ. 100-00 | ரூ. 10-00 |
| 3. ஆட்டிறைச்சிக் கடை இல. என். எம். எஸ். 4 சந்தை, சாவகச்சேரி | ரூ. 100-00 | ரூ 10-00 |

மேற்படி வைப்புப் பணமும் கேள்விப் படிவக் கட்டணங்களும், செலுத்தப்படுவதன்பேரில் 15-3-78 பிற்பகல் 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல்வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் திருப்பித் தரப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித் தரப்படும் கேள்வி வைப்புப் பணமும், படிவக் கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இந்த அலுவலகத்தில், வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். அல்லது பதிவுக் கடிதம்மூலம் அனுப்பப்படலாம். எந்த வியாபாரத்திற்கு கேள்வி விடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையுமோ, எவற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளருக்குண்டு.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
1-3-78

8671

கச்சதீவுக்கு

## மதுபானம் எடுத்துச் செல்ல அனுமதி இல்லை

[வண்ணார்பண்ணை]

கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரீகர்கள் மதுபான வகை கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசேப் தலைமையில் வியாழக்கிழமை கச்சதீவு உற்சவ ஏற்பாடுகள் பற்றி நடந்த அதிகாரிகள் மகாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஒரு யாத்திரீகர் ஒருகலன் தேங்காய் எண்ணெயை மட்டும் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர்.

ஊர்காவற்றுறை சுற்றுலா நீதிமன்றம் இம்மாதம் 11-ம் 12-ம் திகதிகளில் கச்சதீவில் இயங்கும் தேசிய அடையாள அட்டை பாஸ்போட் போன்ற அறிமுக அட்டைகளை ஒவ்வொரு யாத்திரீகர்களும் வைத்திருக்க வேண்டும் இவைஇல்லாதவர்கள் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு உதவி அரசாங்க அதிபரது உத்தரவு பெறப்பட்ட அறிமுகப்படங்களையும் எடுத்துச்செல்லலாம்.

பாஸ்போட்டிய அத்தாட்சிப் பத்திரமும் சகல யாத்திரிகர்களிடமும் இருக்க வேண்டும்

இம்மாதம் 9-ம் திகதி முதல் யாத்திரிகர்கள் கச்சதீவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். 13-திகதி பி. ப 3 மணிக்குப்பின் எவரும் கச்சதீவில் நிற்க அனுமதிக்கப் படமாட்டார்கள்.

இதுவரை யாழ்ப்பாணத்திலிருந்து 92 தனியார்படகுகளுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மணமானவர்கள் 5000 ரூபா பெறுமதியான நகைகளையும் மணமாகாதவர்கள் 2000 ரூபா பெறுமதியான நகைகளையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இம்மாதம் 9-ம் திகதி கச்சதீவில் கடைகள் வைத்திருப்பவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் சுங்க அதிகாரியால் வழங்கப்படும்.

கச்சதீவில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் பொதுசனத் தொடர்புகள் உத்தியோகத்தர் திரு. ரு எல் பற்றிக் தலைமையில் 8 ம் திகதி செல்ல விருக்கின்றனர்.

சுன்னாகம்

ப. நோ. கூ. சங்கம்

(வரைவுள்ளது)

சுன்னாகம்

## அறிவித்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள வியாபாரிகளிடமிருந்தும், வியாபார ஸ்தாபனங்களிடமிருந்தும் பின்வரும் பொருட்களை எமது சங்கத்திற்கு விற்பனை செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை 6-3-78லிருந்து சங்கத்தின் காரியாலய வேலைநாட்களில் நேரிலோ அல்லது 15 சத முத்திரையிடப்பட்ட கடித உறை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 20-3-78 நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொருட்களின் விபரம்:

1. வெல்லம்.
2. சர்க்கரைத்தூள்.
3. தேயிலை.
4. பயறு.
5. உழுந்து.
6. உழுத்தம்பருப்பு.
7. தட்டாப்பருப்பு.
8. புளி
9. கச்சான்.
10. தே. எண்ணெய்
11. பிண்ணாக்கு.
12. தவிடு.
13. பயறு வகை.
14. பாக்கு.
15. மிளகு

பொது முகாமையாளர்
(சுன்னாகம் பல நோ.கூ. சங்கம்)
3-3-1978

8679

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

கோப்பாய் தெற்கு செல்லத்துரை கைம்பெண் தனலட்சுமி என்பவரின் மரணசாதனம் இல்லாச் சொத்தின் விடயத்தில் மரணமெய்தியவர்

வீரவாகு துரைராசா,
கோப்பாய்.

மரணசாதன நியாயாதிக்கம்- இல. 3353.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொகுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978 பங்குனி 8 நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாகிகப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

நீதிமன்றக் கட்டளைப்படி,

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

1978 மாசி 24ந் திகதி.

8655

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பனைமரங்கள், சிலாகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. டொலர் அலுமினியம் தொழிற்சாலை, மாவிட்டபுரம். 8664

பளைக்கு அருகாமையில் ரோட்டு ஓரத்தில் 40 பரப்புத் தென்னந்தோட்டம். காய்க்கும் பருவமுள்ள தென்னைகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; 76 A, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 8673

16'' X 10'' பாக்ஸ்ரர் இறசர் புது மொடல். Bronze Bearing, Automatic Greasing. அதிகம் பாவிப்பில்லை. என்சின் இல்லை. கு. விவேகானந்தன், வல்வெட்டித்துறை. 8656

### தேவை

ஒன்பது மாதக் குழந்தையைக் கவனித்து உதவியாக இருக்கவும், வீட்டைத் துப்புரவாக வைத்திருப்பதற்கும் மட்டுமே ஒரு பெண் உடனடியாகத் தேவை. சம்பள விபரங்களை நேரில் பேசிக்கொள்ளலாம். விளம்பர இல 8652, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8652

கணிதம்-பௌதிகம் உயர் வகுப்புகளுக்கு கற்பித்தற்குரிய பட்டதாரிகள் தேவை. தராதர விபரங்களுடன் 10-3-78க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு 8676

கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் எழுதுவினைஞராகவும், காசாளராகவும் கடமையாற்ற கணக்கெழுதுவதில் அனுபவமும் ஆங்கிலம் தெரிந்தவரும், தட்டச்சு அனுபவம் உள்ளவருமான ஒருவர் தேவை விண்ணப்பக்காரர் தங்கள்சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பத்தை அனுப்பவும். விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி, யாழ். மோட்டார் ஸ்ரோஸ், 108/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8651

### தேவை

ஸ்ரீல் கதிரைகள், மேசைகள், ஜக்ஸ், ['ராக்கை'] முதலியன செய்வதில் நல்ல அனுபவமுள்ள வெல்டர் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம் 8646 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8646

பாக்ஸ் இன்டஸ்றீஸில் பாக்ஸ் (Bags) ஒட்டுவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஜி. எஸ். கே. ஸ்ரோர்ஸ், 275, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8649

யாழ்ப்பாணம் பஜார் பகுதியில் அடைவுகடை நடத்துவதற்கு இடம் அல்லது கடை தேவை சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 8678 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 8678

### கல்வி

பிராஜ்மல் வேர்னர், ''சிவமன்றம்,'' தெல்லிப்பளை (கூட்டுறவு வைத்தியசாலைக்கு அண்மையில்) ஆங்கிலம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் மாணவரின் வசதிக்கேற்றபடி நடைபெறுகின்றன. 8661

### பயிற்சி

வெல்டிங் பயிற்சி ((Arc Welding) A. W. S. பாடத்திட்டத்தை அனுசரித்து நடாத்தப்படும். 3 மாதகால பயிற்சி 12-3-78ல் ஆரம்பமாகின்றன. பயிற்சியின் இறுதியில் நாம் வழங்கும் டிப்ளோமா பத்திரம் வேலைவாய்ப்பு தேடித்தரும். சகல நிறுவனங்களால் ஏற்கனவே பெருமதிப்பைப் பெற்றவை. விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபால் உறை அனுப்பவும். அக்ரோ என்ஜினியேஸ், 135, செல். பற்றிக்ஸ் ரோட், யாழ்ப்பாணம். 8669


வெளிவந்துவிட்டது

G.C.E. A|L 1978 AP. பரீட்சைக்குரிய

## வினா - விடை

பொருளாதாரம் T. லோகநாதன் B. A.
இந்து நாகரிகம் N. S. ஐயர் M. A.
(A/L, G A Q வகுப்புகளுக்குரியது)

கிடைக்குமிடங்கள் :

| | |
|---|---|
| லோகநாதன் இன்ஸ்ரிரியூட், | 166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| கல்வி போதனநிலையம், | 34, பலாலி வீதி, யாழ்ப்பாணம். |
| சிறிலங்கா புத்தகசாலை | 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| பூபாலசிங்கம் புத்தகசாலை | 4, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். |



# கோட்டை தகர்ந்தது!

**வடகோவை. வரதராஜன்**

பனிப்புகார் எங்கும் சூழ்ந்திருந்தது. பல்லைக் கிடுகிடுக்க வைக்கும் அந்தப் பனிக் குளிரில் குளிர்காற்று உடம்பை விறைக்கச்செய்தது. தோளில் கிடந்த துவாய்த் துண்டை உதறி காதுமறையும்படியாகத் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு சுருட்டைப் பற்ற வைத்தார் ரத்தினத்தார்.

அடுக்களையில் மனைவி செல்லமும் மூத்த மகள் கமலாவும் தேநீர் தயாரிப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பாத்திரங்கள் அடிபடும் சத்தம் காட்டிக்கொண்டிருந்தது. வெளியே சென்று முற்றத்தில் கிடுகடுக்கப்பட்டிருந்த வண்டியைப் பார்த்தார் ரத்தினத்தார். எல்லாம் ஒழுங்காக அடுக்கி அவிழாமல் நன்றாக இறுக்கிக் கட்டியிருந்தான் சின்னத்தம்பி. மீண்டுமொரு முறை வண்டியைச் சுற்றிப் பார்த்துவிட்டு வைரமுத்துவை எழுப்புவதற்கு அடுத்த வளவிற்குச்சென்றார். வைரமுத்துவைத் தட்டி எழுப்பி, வண்டியைப் பூட்டச் சொல்லி பூவரசம் கம்பொன்றை முறித்து வாய்க்குள் சொருகிக்கொண்டு வீடு நோக்கி நடக்கலானார். ''மட்டை 62 சதப்படி பார்த்தாலும் 2000 மட்டையும் 1240 ரூபா வருகுது. மாரி மழையோடு வேலி எல்லாம் இப்ப உக்கிப்போய்க்கிடக்கும். இதுவும் நல்ல விலைபோகும். கொப்பாயிலைபோல் தரகு தம்பனைப் பிடிச்சால் கடைசி 65 சதமாக ஆவது வித்துப்போடலாம்'' - தனக்குள்ளே முணுமுணுத்தபடி வீட்டை அடைந்தார் ரத்தினத்தார்.

* செல்லம் மூக்குப் பேணியில் கொடுத்த வெறும் தேநீரை வாங்கி வாயில் வைத்து உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கினார். அப்படி உறிஞ்சிக்கொண்டே கிரிமலைப் பனங் கட்டியை ஒரு கடி கடிப்பதில் அலாதி இன்பம் ரத்தினத்தாருக்கு. மகள் கமலா இன்னமும் அடுக்களையில்தான் இருக்கிறாள் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, குரலைச் செருமி ''இஞ்சை பார் செல்லம், இப்ப எல்லாமாய் 2000மட்டை கிடக்குது. எப்பிடியும் 1240 ரூபாவுக்கு மேலை வித்துப் போடலாம், வாறதில 1000த்தையும் எடுத்து கிடக்கிற காசோடை சேத்தால் பதினாயிரம் மட்டில தேறும். இந்த மாசச் சீட்டிலேயும் ஒரு ஏழுநூறு மட்டில வரும். எல்லாத்தையும் சேத்தால் இருவதாயிரம் மட்டில நிற்கும். இந்த 'கல்வயல்' சம்மந்தத்தை விடக்குடாது. பெடியனும் நல்ல உத்தியோகம். அதோடை அருமையான குணம். காசு போனாலும் பறவாயில்லை, எப்பிடியெண்டாலும் இந்த வைகாசிக்குள்ளை கலியாணத்தை முடிச்சுப்போடவேணும். பேந்து அடுத்தவள் சரசுவிற்கு ஒரு சம்மந்தம் பார்க்கவேணும். என்னசெய்யிறது நாலையும் பெட்டைக் குட்டியளாய்ப் பெத்துப்போட்டிருக்கிறம். சரிசரி நேரம் போகுது. அங்கை வைரமுத்தன் பாத்துக்கொண்டிருக்கப் போறான். நீ போய் இறப்பிலை இடக்கிறதுவரம்கம்பைஎடுத்து வா'' - ஏதோ நாது குமரையும்கரைசேர்த்துப்பேசிட்டவர் மாதிரி உற்சாகத்தில் நின்றார் ரத்தினத்தார்.

சின்ன அரிக்கன் லாம்பைக் கொளுத்தி வண்டிக்குக்கீழை கட்டிவிட்டு தொழுவத்திற்கு சென்றார் அங்கே அவரின் செல்லப்பிள்ளைகளான ''செவலைக்'' காளைகள் இரண்டும் வாயில் நுரைவழிய ஆறுதலாக அசைபோட்டுக்கொண்டிருந்தன. பனிக்குளிரில் அவைகளின் மூக்குவழியே வரும் மூச்சு புகை மண்டலமாக வந்துகொண்டிருந்தது. மாடுகளைத் தட்டி எழுப்பினர். அவை எழுந்து ஒரு முறை சாணம் போட்டுவிட்டு முதுகை வளைத்து சோம்பல் முறித்தன. அவற்றைத் தட்டிக்கொடுத்துவண்டியில் பூட்டி குத்துக்காலை அவிழ்த்து மேலே கட்டிவிட்டு மாடுகளைச் சாய்க்கலானார். இவ்வளவு நேரமும் ரத்தினத்தாரைப் பார்த்துக்கொண்டிருந்த வைரமுத்தர் தன் 'பயிலைக்' காளைகளின் நாணயத்தை தளர்த்தி மாடுகளைத் தட்டிவிட்டார். ''வைரமுத்து, என்ரை மாடுகளை முன்னுக்குச் சாய்க்கிறன் உன்ரை வண்டில் பிறத்தாலே வரட்டும்'' என்று வைரமுத்தரிடம் கூறிவிட்டுச் சுருட்டைப் பற்றவைத்தார்.

அந்த அதிகாலைப் போதினிலே 'ஜல் ஜல்' என்ற சலங்கைச் சத்தம் சீராக ஒலிக்க இரண்டு பெரிய கூரைவீடுகள் ஒன்றுக்குப் பின்னால் ஒன்று வருவதுபோல பனிப் புகாரை ஊடறுத்து அவ்விரு கிடுகு வண்டிகளும் சென்றுகொண்டிருந்தன.

●

''டேய் சேகர் ஏன்ரா இவ்வளவு 'பாஸ்ராய்' காரை ஓட்டுறாய்'' எனப் பயத்துடன் கேட்டார் நகைக்கடை முதலாளி கனகரத்தினம்.

குடிவெறியில் சிவந்திருந்த கண்களை உருட்டி முழித்தவாறே ''ஏன் அப்பா இப்படிப் பயந்து சாகிறீர்கள். இந்த விடியக் காலமேலை அதுவும் கண்டி ரோட்டிலை ஆர் வரப் போறாங்கள்'' என அலட்சியமாகக் கூறியவாறே 'அச்சிலேற்றரை' இறுக்கி அமுத்தினான் சேகர். கண்மண் தெரியாத வேகத்தில் கார் அந்த ஏகாந்தமான ரோட்டில் பறந்தது. பணத்திமிரும், உள்ளே இறக்கின வெளிநாட்டுச் 'சரக்கின்' விறுவிறுப்பும் அவன் கண்களைச் சுழல வைத்தன. தூரத்திலே கிடுகு வண்டி வந்துகொண்டிருப்பதை அறியாதவனாக 'அச்சிலேற்றரை' இன்னும் அமுத்தினான் சேகர். காற்றிலே எழும்பி விரைந்தது கார்.

'கிறீச்...சடார்!' அந்த வைகறைப் பொழுதையே கிடுகிடுக்க வைக்குமாப்போல் பெரும் சத்தத்துடன் கார் கிடுகு வண்டியுடன் மோதிப் பெரும் ஒலி எழுப்பியது. வண்டி தூக்கி எறியப்பட்டுக் கானில் விழுந்து கிடந்தது. இரத்தினத்தாரின் செவலைக் காளைகள் இரண்டும் இரத்த வெள்ளத்தில் துடித்துக்கொண்டிருந்தன. கீழே விழுந்த இரத்தினத்தார் மேலும், வைரமுத்தர் மேலும் கட்டவிழ்ந்த கிடுகுகள் மளமளவெனச் சரியலாயின. மயிலைக் காளைகளில் ஒன்று வண்டியின் நுகக்கயிற்றை அறுத்துக்கொண்டு குடல் தெறிக்க ஓடியது மற்றையது கால் முறிந்து கீழே விழுந்து அவல ஒலி எழுப்பியது.

காரின் முன்பக்கம் உருத் தெரியாமல் சிதைந்திருந்தது. முன்னாசனத்தில் இருந்த சேகர் பதைத்த காயங்களுடன் 'ஸ்ரெயரிங்'கில் சாய்ந்திருந்தான். கனகரத்தினத்தின் கையில் கண்ணாடித் துண்டொன்று ஏறியதால் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. தன் மகனை உசுப்பினார் கனகரத்தினம். 'குப்'பென்று மதுவின் நெடி அடித்தது. அப்போதுதான் தெரிந்தது, தன் மகன் குடிபோதையில்கார் ஓடி இருக்கிறான் என்று என்னசெய்வதென்று தெரியாமல் திண்டாடினார் கனகரத்தினம்.

யாழ்ப்பாணத்தை நோக்கி வந்த டாக்ஸிச் சாரதி ஒருவன் தடம்புரண்டு கிடக்கும் வண்டிலைக் கண்டுவிட்டுத் தன் டாக்ஸியை நிற்பாட்டினான். கனகரத்தினம் டாக்ஸிச் சாரதியைக் கூப்பிட்டு, நூறுரூபா நோட்டொன்றை அவன் கையில் திணித்துவிட்டு ''இவனைக் கொண்டுபோய் டாக்டர் தணிகாசலத்தின் 'பிறைவேற் நேஸிங்கோமி'ல் நான் சொன்னெண்டு சொல்லிச் சேர்த்துவிட்டு உன்ரை பாட்டிலை போய்விடு. வேறு யாரிட்டையும் மூச்சும் காட்டக்கூடாது'' என்று சொல்லி, இன்னுமோர் ஐம்பது ரூபாவை அவன் கையில் திணித்தார். 150 ரூபாவைக் கண்டதும் மறுபேச்சில்லாமல் சேகரைத் தூக்கிப் போட்டுக்கொண்டு விரைந்தான் அந்த டாக்ஸிச் சாரதி.

இனி என்ன செய்வது? கனகரத்தினத்தின் நரி மூளை குறுகுறுத்தது. ஆட்கள் நித்திரையால் எழும்பி வருமுன், ஏதாவது செய்யவேண்டும்! பளீரென அவரின் மூளையில் ஓர் அற்புத யோசனை தோன்றியது.

கிடுகுகள் எல்லாம் சரிந்து மாட்டுடன் பிணைக்கப்பட்ட கயிறுகள் எல்லாம் அறுந்து ஒரு சில்லுடன் மொட்டையாக நின்ற இரத்தினத்தாரின் வண்டி அவர் கண்ணில் பட்டது. தன் கை வலியையும் பொருட்படுத்தாது வலப் பக்கமாக நின்ற வண்டியைக் கஷ்டப்பட்டு இழுத்துவந்து, இடப்பக்கமாகத் தன் காரின் முன்னே நிறுத்திவிட்டுக் காரிலேறி மயங்கியவர் போல் முன்னாசனத்தில் சாய்ந்துவிட்டார்.

●

''டமார்'' எனப் பெரிய சத்தத்தைக் கேட்டதும், வாலிபர்கள் சிலர், குளிரையும் பொருட்படுத்தாது சத்தம் வந்த திக்கை நோக்கிக் கையில் அரிக்கன் லாம்புடன் நடக்கலாயினர். அவர்கள் வந்து சேருவதற்குள் கனகரத்தினத்தார் தன் காரியத்தை முடித்துக்கொண்டு 'மயங்கி'விட்டார்.

வண்டில் ஒன்று காருக்கு முன்னால் திசைமாறி நிற்பதையும் ஒரு வண்டி குடை சாய்ந்து நிற்பதையும் கண்ட வாலிபர்கள் ஓடிச்சென்று காருக்குள் எட்டிப் பார்த்தனர். அங்கு சாரதியின் ஆசனத்தில் 'மயங்கி'க் கிடந்த கனகரத்தினத்தைத் தூக்கி, மயக்கம் தெளிவிப்பதில் முனைந்தனர். ஒரு பகுதியினர் கிடுகுகளால் மூடப்பட்டுக் கிடந்த வண்டிக்காரர்களைத் தேடலாயினர். இதற்கிடையில் தகவல் தெரிந்து பொலிஸார் இருவர் விரைந்து வந்தனர்.

'மயக்கம்' தெளிந்தவர் போல் கண் விழித்த கனகரத்தினம், ''இடியட், றோங் சைட்டாலை வந்து மோதிப் போட்டான்'' என்று முணுமுணுத்தார். பொலிஸார் வந்து கனகரத்தினத்தின் வாக்குமூலத்தை எடுத்தனர். ''எதிர்ப்புறத்தில் 'வந்த வண்டில்மாடு வெருண்டு ரோட்டின் இக்கரைக்குத் தாவிக் காருடன் மோதிவிட்டது'' என வாக்குமூலம் கொடுத்தார்.

கிடுகுகளின் அடியிலிருந்து இரத்தம் தோய்ந்த நிலையில் மீட்கப்பட்ட இரத்தினத்தாரும், வைரமுத்தரும் உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கனகரத்தினம் இரு பொலிஸ்காரரையும் அழைத்து, அவர்களுடன் ஏதோ ஆங்கிலத்தில் கிசுகிசுத்தார். அவரிடமிருந்து அவர்களுக்கு மூன்று நூறு ரூபா நோட்டுக்கள் கைமாறின.

●

ஆஸ்பத்திரியில் கண்விழித்த இரத்தினத்தார், தான் கட்டியிருந்த கோட்டைகள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டதை எண்ணியெண்ணிக் கண்ணீர் விட்டார், கிடுகு போனாலும் பறவாயில்லை, முதலுக்கு முதலாய் நின்டு, நாலு வருசமாய் ரோட்டிலை 'கோடடிச்ச' மாதிரி வண்டி இழுத்த செவலைக் காளைகள் இறந்த செய்தி, அவரின் இதயத்தை இறுக்கிப் பிழிந்தது.

(7-ம் பக்கம் பார்க்க)

## எழுத்துக்கு மறுநாள்...

திருமண எழுத்து நேற்றுச்
சிறப்புடன் நடந்த தென்றூர்
பெருமகிழ் வுடனே வீட்டார்
பேசினர் அதனைப் பற்றி
மருமகன் இன்று காலை
வருதலைக் கண்ட மாமி
பெரியதோர் கதிரை வைத்தே
பெண்ணுக்குச் சேதி சொன்னுள்

சேதியைக் கேட்ட பெண்ணுள்
திருமுகம் கழுவிப் பின்னர்
சோதிசேர் முகத்தில் எல்லாம்
''பொன்ட்ஸினை'' அள்ளிப் பூசி
வீதியில் நேற்றெடுத்த
மென்பட்டை உடுத்துக்கொண்டு
காதலன் தன்னைக் காணக்
கடுகியே வந்தாள் அங்கே

மலிவாக விற்பதான
''மலிபன்'' பிஸ்கட் ஓர் பைக்கெட்
பொலிவாகக் கொணர்ந்த பின்னை
புன்சிரிப் புடன் இருந்தாள்
எலிபோல ஒதுங்கி வந்த
ஏந்திழை வெட்கத் தாலே
புலிபோல நின்றான் - தன்னைப்
பார்த்தற்கே இயலாளானுள்

மேசையை ஒருக்கால் பார்த்தாள்
விளங்கும் சாளரத் தைப்பார்த்தாள்
ஆசையை அவன்மேல் வைத்தும்
அவன் முகம்பார்க்க நாணி
ஓசையோ சிறிதும் இன்றி
ஒளிஉடல் நடுக்கம் கொள்ளல்
பாசைகள் பலவே கற்றும்
பகருமோர் ஊமை ஆனுள்

மாப்பிள்ளை கொழும்புத் தம்பி
மண்ணிடை நாணு வானே!
பூப் போன்ற பெண்ணினுளைப்
புதுப் புதுக் கேள்வி கேட்டான்
காப்பிட்ட கையி னுளும்
கடியதாம் நாணம் தன்னைக்
கூப்பிட்டே அனுப்பி விட்டுக்
கொழுநனைத் திரும்பிப் பார்த்தாள்

தூரத்தே நின்றோர் மெல்லத்
தூரத்தைக் குறைக்கலானுர்
நேரத்தின் அருமை பற்றி
நெஞ்சுளே புரிந்து கொண்டே
ஓரக்கண் பார்வை விட்டே
உவந்து கைதீண்ட லுற்றூர்
பாரெலாம் எழுத்தின் பின்னர்
பெறும் பயன் அவரும் பெற்றூர்.

—புலவர் ம. பார்வதிநாதசிவம்

## அணு ஆலைகளுக்கு கடல் நீரிலிருந்து யுரேனியம் உற்பத்தி

### ஜப்பான் சாதனை

கடல் நீரில் சிறு அளவில் யுரேனியம் காணப்படுகின்றது. ஆனல் அதனைப் பிரித்தெடுப்பதென்பது மிகக் கடினமான காரியம். இருந்தபோதிலும் அண்மையில் ஜப்பானிய நிறுவனமொன்று கடல் நீரிலிருந்து யுரேனியத்தை] பிரித்தெடுக்கும் சாதனையை வெற்றிகரமாகநிறைவேற்றியுள்ளது கெட்டியான ரசாயன உருவில் யுரேனியத்தைப் பிரித்தெடுத்து 'மஞ்சள் கேக்'என்றுஅதற்கு அக்கம்பனி பெயரிட்டிருக்கிறது. அணு உலைகளுக்கு இதனை எரிபொருளாகப் பயன்படுத்த முடியும்.

அணு ஆலைகளுக்குத் தேவையான யுரேனியம் பாறைகளிலும் கடல் நீரிலும் பரவலாகக் காணப்பட்டாலும் அதன் படிவ அமைப்பு மிகச் சிறிதாகவே இருப்பதால் பிரித்தெடுப்பது சிரமமாகவுள்ளது.

ஜப்பானைப் பொறுத்தவரை அதற்குத் தேவையான யுரேனியம் அதன் நிலப்பரப்பில் காணப்படவில்லை. அதனுல் நீரிலிருந்து அதனை பிரித்தெடுப்பது பெருமளவில் பயனளிப்பதாய் இருக்கும். கடல் நீரிலிருந்து யுரேனியம் பிரித்தெடுக்கும் முயற்சியில் பிரிட்டனும், மேற்கு ஜெர்மனியும் மேற்கொண்டுள்ள முயற்சிகளில் இன்னமும் சரியான வெற்றி கிடைக்கவில்லையென்று தெரிகிறது.

(தகவல்: ஜப்பான் நியூஸ்)

# உண்மையின் திறவுகோல்!

உண்மையின் திறவு கோல் உள்ளத்தில் இருக்கிறது. உண்மை, அன்பு, மனச்சாட்சி உறுதி இருந்தால் மனப்பூட்டைத் திறக்கலாம்.

தரையைப் பார்த்த முதல் மனிதன் "உலகம் தட்டையானது" என்றான்; தரையை விட்டு, உயர்ந்த வெளியிற் சென்றவன் "அது தட்டையல்ல உருண்டை வடிவமானது" என்றான். இந்த உலகைத் தட்டையாக்க முயன்றால், அது உடைந்து நொறுங்கி விடும்.

தீ சுடும் என்பதைத் தொட்டுப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா? அனுபவ ரீதியாக உலகம் அறிந்த உண்மையை அறிய மீண்டும் விஷப்பரீட்சை செய்ய வேண்டியதில்லை.

விஞ்ஞான அறிவு வளர்ச்சி அழிவுச் சக்திகளைப் பெருக்கி கொண்டிருப்பதால், ஆபத்தும் இருந்துகொண்டிருக்கிறது.

சாம்பார் ரசமானது என்பதற்காக அது தவறான வழியில் தயாரிக்கப்படக் கூடாது; அதைத் தவறான வழியில் வாய்க்குட் திணிக்கவும் கூடாது.

தறித்த மரம் சரிய ஆட்டம் கொடுப்பதைப் போன்று அழிவுச் சக்திகளின் மத்தியில் உலகம் சுழன்று கொண்டிருக்கிறது.

அதர்மம் மேலோங்கி வரும் போது அழிவும் நெருங்கி வந்துகொண்டுதான் இருக்கும். அழிவு தடுக்கப்பட வேண்டுமானால் அதர்மம் அழிக்கப் பட வேண்டும் அல்லது அழிவின் எல்லையை நீடிக்க அதன் அசுரவேகத்தைக் கட்டுப் படுத்த வேண்டும்.

இங்கு மேல் நாட்டினரின் மறைமுகமான தலையீடு, தமிழினத்தின் தனித்துவத்தை மங்கி மறையச் செய்து கொண்டிருக்கிறது. இதனால் ஒரு கலப்பினம் உருவாகி வருகிறது. இதை உலகிலுள்ள தமிழரெல்லாம் ஒரே நோக்குடன் எதிர்க்க முன்வர வேண்டும். இல்லையேல் சாகாவரம் பெற்ற தமிழையும் அவர்கள் அழித்தொழிக்க முற்படுவார்கள்

தாய் சீற்றமடைந்தால், தாய்க்குலம் எல்லாம் அவமானம் தாங்காது சபித்தால், தாய்ச்சக்தி, அதாவது உலகை ஓர்கட்டில் நிறுத்தி இயக்கி வரும் மகா சக்தி, சீற்றமடைந்து விடுவாள். அவளது சீற்றம் அதிகரித்தால் நிலைதவறி இந்த உலகம் அழித்தொழிக்கப்பட்டு விடும்.

சமூகத்தில் சமரசம், சமத்துவம், சம அந்தஸ்து வேண்டும் என்பதற்காக, தாய்மையைச் சீரழிக்கக்கூடாது. தாய்மையின் தன்மானத்தைக் கெடுத்து அழிக்கக் கூடாது. தாய்மையை மதித்துப் போற்றிப் பாதுகாக்காது விட்டால்; தாய்மை சின்னாபின்னப்பட்டுச் சிதைந்து அழிந்து விடும். தாய்மை அழிந்தால் உலகம் நிலைபெற முடியாது.

உலக மக்கள், உண்மைக்கு, மனச்சாட்சிக்கு, நீதிக்கு மாறான, தவறான புதிய புதிய வழிகளில் கலியைத்தீர்க்க முற்பட்டால் ஈற்றில் கலிதீர்ந்து கலியுகம் அழிந்து விடக்கூடும். எனவே கலியுகம் விரைவில் அழிந்து விட்டால் இன்றுள்ள விஞ்ஞான வளர்ச்சி இன்னோர் யுகத்தில் உடனே ஏற்பட்டு விடும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே உலகமக்கள் அனைவரும் சமரச சன்மார்க்க வழி நின்று; பண்பாட்டை, ஒழுக்கத்தை தெய்வபக்தியை வளர்க்க ஒத்துழைக்க வேண்டும்.

உலகை நிலைநிறுத்த உலகமக்கள் எச்சரிக்கையுடன், அவதானமாக நடந்து கொள்வார்களாக இறைவனை, இறைவியை எல்லோரும் வழிபடுக நலம் மேலோங்கி நானிலம் நிலைக்கட்டும்.

**அருட்கவி திமிலைக்கண்ணன்**

ஞானத்தமிழ்—34

# "கூடு நீயென்று கூடல் இழைக்கும்"

**வ. குகசர்மா**

தலைவரைப் பிரிந்த மகளிர் அவர் வரவை எதிர்நோக்கிப் பார்க்கும் நிமித்தங்களுள் கூடற் சுழியும் ஒன்று கடற்கரை அல்லது ஆற்றங்கரையில் உள்ள மணலில் கண்ணை மூடிக்கொண்டு மணலில் வட்டமாகச் சுழிப்பார்கள். அது முதலுங்கடையும் கூடுமாயின் வருவாரென்றும், கூடாதாயின் வாராரென்றும் கொள்ளுதல் மரபு.

அகப்பொருள் துறையிற் சிறந்து விளங்கும் இக்கூடல் துறையை நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஏனைய அடியார்களும் பக்தித் துறையிலும் எடுத்தாண்டிருப்பது நோக்கத்தக்கது.

சிறு வயதிலே ஊமையாக இருந்து, திருச்செந்தூர் முருகப் பெருமான் அருளினால் பேசத் தொடங்கியவர் குமர குருபர சுவாமிகள். அவர் பாடிய பல பிரபந்தங்களில் ஒன்று மதுரைக் கலம்பகம். அதிலே ஒருபெண் கூடலிழைக்கும் காட்சி ஒன்றுவருகிறது. கூடல் என்னும் மறு பெயருடைய மதுரையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் என் மனதை உருக்கி என்னோடு சேரார் ஆயின், நான் இழைக்கும் கூடல் பிழைத்திடும் என்று பாடுகின்றாள் அப்பெண்:

"தழைத்திடும் கூடலார்
குழைத்துடன் கூடரார்
பிழைத்திடுங் கூடலே
இழைத்திடும் கூடலே"

இப்பாடலில் இறைவன் தான் தன் மனதை உருக்கி

[7ம் பக்கம் பார்க்க]

AUTOMOTIVE GROUP

# எங்கள் தயாரிப்புகளும் சே
# ஒன்றிணைந்து உங்கள் வாகன
# அதிக நாட்கள் இயங்க உத

LION

லையன் ஸ்பிரிங் பிளேட்ஸ்
ஸ்திரமாக இயங்குபவை.



ஆட்டோ மோட்டிவ் நிறுவனத்தினதும், பாட்கோ மற்றும் லையன். ஆகியவற்றின் தயாரிப்புகள் உயர்தரத்திற்கேற்ப நீடித்துழைக்கும் வகையில் உற்பத்தி செய்யப்படுவதால், பலநாட்கள் உபயோகிக்கலாம். அதோடு எவ்வளவு தூரத்லிருந்தாலும் உங்களுக்குக் கிட்டும் வகையில் பல வியாபாரிகள் மூலம் விநியோகிக்கப்படுவதால், நீங்கள் எங்கு சென்றாலும் ஆட்டோ மோட்டிவ் தயாரிப்புகளுடன் செல்லுங்கள். அவை உங்கள் வாகனங்களை அதிக நாட்கள் இயங்கச் செய்கின்றன.

உற்பத்தியாளர்கள்:
பாட்கோ மோட்டார் உதிரிப்பாகங்கள்
சிலோன் ஆட்டோமோட்டிவ் புறடக்ட்ஸ்

விநியோகஸ்தர்கள்:
ஆட்டோமோட்டிவ் புறடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
217 பஞ்சிகாவத்தைறோட், கொழும்பு 10
தொலைபேசி: 35791

ZENITH

## ஒரே பார்வையில் இருபதாம் நூற்றாண்டுக் கலண்டர்
## கி. பி. 1900 — கி. பி. 2000

| சாதாரண வருடங்கள் மாதம் | திகதி | வருடங்கள் ஞா | தி | செ | பு | வி | வெ | ச | ஞா | தி | செ | பு | வி | வெ | ச | லீப்பிய வருடங்கள் திகதி | மாதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி ஒக்டோபர் | 1 8 15 22 29 | 1900 | 1912 | 1901 | 1902 | 1903 | 1904 | 1916 | 1905 | 1906 | 1907 | 1908 | 1920 | 1909 | 1910 | 29 22 15 8 1 | ஜனவரி ஏப்ரல் யூலை |
| ஏப்ரல் யூலை | 2 9 16 23 30 | 1911 | 1923 | 1924 | 1913 | 1914 | 1915 | 1927 | 1928 | 1917 | 1918 | 1919 | 1931 | 1932 | 1921 | 30 23 16 9 2 | செப்டம்பர் டிசெம்பர் |
| செப்டம்பர் டிசெம்பர் | 3 10 17 24 31 | 1922 | 1934 | 1935 | 1936 | 1925 | 1926 | 1938 | 1939 | 1940 | 1929 | 1930 | 1942 | 1943 | 1944 | 31 24 17 10 3 | யூன் |
| யூனி | 4 11 18 25 — | 1933 | 1945 | 1946 | 1947 | 1948 | 1937 | 1949 | 1950 | 1951 | 1952 | 1941 | 1953 | 1954 | 1955 | — 25 18 11 4 | மார்ச் நவம்பர் |
| பெப்ரவரி மார்ச் நவம்பர் | 5 12 19 26 — | 1956 | 1968 | 1957 | 1958 | 1959 | 1960 | 1972 | 1961 | 1962 | 1963 | 1964 | 1976 | 1965 | 1966 | — 26 19 12 5 | பெப்ரவரி ஆகஸ்ட் |
| ஆகஸ்ட் | 6 13 20 27 — | 1967 1978 | 1979 | 1980 | 1969 | 1970 | 1971 1982 | 1983 | 1984 | 1973 | 1974 | 1975 1986 | 1987 | 1988 | 1977 | — 27 20 13 6 | மே |
| மே | 7 14 21 28 — | 1989 | 1990 | 1991 | 1992 | 1981 | 1993 | 1994 | 1995 | 1996 | 1985 | 1997 | 1998 | 1999 | 2000 | — 28 21 14 7 | ஒக்டோபர் |

# கி. பி. 1900 - 2000 ஆண்டுவரை நாள்காட்டி

இது ஒரு புதுவிதக்கலண்டர். கி. பி. 1900-ம் ஆண்டு தொடக்கம் கி. பி. 2000-ம் ஆண்டுவரையும் பார்க்கக்கூடியது இது.

### இதனை எப்படிப் பார்க்கலாம்?

விளக்கம் பின்வருமாறு:-

1. வருடங்கள் என்ற பகுதியில் எந்த எந்தத் தினங்களில் எந்த எந்த வருடங்களின் தை மாதம் முதலாம் திகதி வருகின்றன என்பதை வரிசைக் கிரமப்படி கி. பி. 1900-ம் ஆண்டு தொடக்கம் கி. பி. 2000-ம் ஆண்டுவரையும் எழுதப்பட்டுள்ள வருடங்களை அவதானியுங்கள்.

2. கீழே கோடு கீறப்பட்டுள்ள வருடங்கள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை வரும் 'லீப்' வருடங்கள் ஆகும்.

3. இடது புறத்தில் குறிக்கப்பட்டிருக்கும் மாதங்கள் லீப் வருடங்களல்லாத சாதாரண வருடங்களில் வரும் மாதங்களாகும். இந்த மாதங்களின் எதிரே குறிக்கப்பட்டிருக்கும் திகதிகள் அந்தந்த வருடங்களின் தை மாதம் முதலாம் திகதி வரும் தினங்கள் ஆகும்.

4. வலது புறத்தில் குறிக்கப்பட்டிருக்கும் மாதங்கள் லீப் வருடங்களில் வரும் மாதங்களாகும். இம்மாதங்களின் எதிரே குறிக்கப்பட்டிருக்கும் திகதிகளும் அந்த அந்த வருடங்களின் தை மாதம் முதலாம் திகதி வரும் தினங்களாகும்.

இக்கலண்டரைத் தயாரித்தவரான திரு ஆர். பேரின்பநாயகம் மயிலிட்டி கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் இணைப்பு அதிகாரியாகக் கடமையாற்றுகிறார். முன்பு கணித ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், பின்னர் மீன்பிடித் திணைக்களத்தில் அத்தியட்சகராகவும் கடமையாற்றியுள்ளார்.

மாணவர்கள் எந்த ஆண்டுக்குமுரிய கலண்டரைத் தாமே தயாரித்துக் கொள்ளவும், சோதிடர்களுக்கு திகதி-நாள் முதலியவற்றை இலகுவில் கண்டுபிடித்துக்கொள்ளவும் இக்கலண்டர் பயன்படும். ஏதாகிலும் ஒரு வருடத்தில் வரும் திகதியின் நாள் என்ன என்பதை அறிய விரும்புகிறவர்கள் மிக எளிதாக அந்நாளை அறிந்து கொள்ள இக்கலண்டர் பயன்படும்.

தயாரித்தவர்:
**ஆர். பேரின்பநாயகம்**

உதாரணம் 1: 1923 ம் ஆண்டு யூலை மாதம் 19ம் திகதி எந்தத்தினத்தில் வருகின்றதெனப் பார்ப்போம்.

1923 ம் ஆண்டின் தை மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமையிலே வருகின்றதல்லவா? எனவே 1923 ம் ஆண்டு சாதாரண ஆண்டாகையால் இடது புறத்தில் குறிக்கப்பட்டுள்ள யூலை மாதத்தின் 2, 9, 16, 23, 30 ம் திகதிகளும், 1923 ம் ஆண்டின் தை மாதம் முதலாம் திகதி வரும் திங்கட்கிழமையிலேயே வருகின்றன. எனவே யூலை மாதம் 16ம் திகதி திங்கள், யூலை மாதம் 17ம் திகதி செவ்வாய் என்ற வரிசைக் கிரமப்படி பார்க்கும்போது யூலை மாதம் 19ம் திகதி வியாழக்கிழமையிலேயே வருகின்றது என்பதைக் கண்டு கொண்டீர்களல்லவா? எனவே 1923 ம் ஆண்டு யூலை மாதம் 19 ம் திகதி வரும் தினம் வியாழக்கிழமையே ஆகும்.


உதாரணம் 2: 1976ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி எந்தத் தினத்தில் வருகின்றதென்பதைப் பார்ப்போம்.

1976ம் ஆண்டு லீப் வருடமாகையால் வலது புறத்தில் குறிக்கப்பட்டிருக்கும் ஆகஸ்ட் மாதத்தின் 5, 12, 19, 26ம்

[7ம் பக்கம் பார்க்க]


சேவையும்
...ாகனங்களை
...டதவுகின்றன

partco
பாட்கோ மோட்டார் உதிரிப்பாகங்கள்
நீடித்துழைக்க தயாரிக்கப்படுபவை.



உற்பத்தியாளர்கள் :
லீயன் ஸ்பிறிங் பிளேட்ஸ்
ஆட்டோ மோட்டிவ் ஸ்பிறிங்ஸ் லிமிட்டெட்

# ஒலியோசை நாடகம்

# நடுத்தீர்வை

(இசை நான்கு)

களம் :
சிவலிங்கம் இல்லம்

ராசம்மா: (கதவு தட்டும் ஒலி) செல்லம்மாக்கா, உள்ளுக்க இருக்கிறியளே?

சிவலிங்கம்: ஆர் அது, உள்ளுக்க வரலாமே? (மகிழ்வில் பிரமித்து) அ... ராசம்மாவே, வாரும்... வாரும்... (சிரித்து) நீர் வருவி ரெண்டு எனக்குத் தெரியும்.

ராச: (பிரசந்தியாக) சிவ மண்ணை, உங்கட அவ எங்க போட்டா? நீங்கள் ஏதோ நினைச்ச என்னவோ சொல்றி யள். இப்ப செல்லம்மாக்கா இல்லையே?

சிவ: மனிசிக்கு வீடுவாசலில இருக்கப் பிடியாது. அவ உம்மைப்போலக் குடுக்கல் வாங்கல் காரரிட்டப் போயிட்டா... [ஆரவாரித்து] என்ன ராசம்மா யோசிக்கிறீர்? இதிலே இரு மன்.

ராச: நான் இருக்க வரேல்லை. அவசரமாக கொஞ்சக் காசு மாறிக்கொண்டுபோக வந்தனான்.

சிவ: அதுக்கென்ன, ஆர் இல்லையெண்டது? சரி, எவ்வளவு வேணும்?

ராச: ஒரு ஆயிரம்போல வேணும்.

சிவ: (அதிர்ந்து) இம்மட்டுத் தொகை இப்ப எதுக்கு?

ராச: பெரிய தொகை யெண்டா உங்களுக்கென்ன? அதுக்குள்ள வட்டியை வேண்டுங்கோவன்.

சிவ: (நைந்து சிரித்தபடி) ராசம்மா. இந்தச் சுமையை நீர் தாங்கமாட்டீர். நான் சொன்னமாதிரி நடந்தீரெண்டால், வட்டியைவல்ல, முதலை யும் உமக்காக விட்டுடுவன்.

ராச: நான் எப்படி நடக்க வேண்டும்?

சிவ: துறந்து சொல்லட்டே?

ராச: ஓ, நல்லாத் துறந்து சொல்லுங்கோ.

சிவ: ராசம்மா, நான்சொல் றது உமக்குப் பிடியாட்டிக் காரியமில்லை. இதுக்காகக் கோவிக்கத் தேவையுமில்லை. நீர் சம்மதிச்சால் உம்மைஎன் ஆரணபரிபத்தம் வைச்சுக் காப் பாத்துவன்.

ராச: இப்ப என்ன சொல்றி யள்?

சிவ: எனக்குஇணங்கினால்... இனி உம்மட விருப்பம்.

ராச: (வறட்டிச்சிரித்து) நீங்கள் நம்பமாட்டியள். நானும் இப்ப நல்லா யோசிச்சுப் போட்டுத்தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறன். நீங்களும் நெருக விடாப்பிடியா இருக்கி றியள். நானும் உங்கட மன சைத் தெரியாமல் நடந்திட் டன். அதை மனசில வையா தையுங்கோ.

சிவ: (ஆசுவாசமாக) அ... உண்மையாய்த்தான் சொல் றீரே?

ராச: இல்லையெண்டால் செல்லம்மாக்கா இல்லாத சமயம் இப்படி உங்களோட பேசிக்கொண்டிருப்பனே?

சிவ: ஆ......அப்படியே சங்கதி? ராசம்மா இப்பதான் என்ர மனம் நிறைஞ்சது. எங்கே இப்படி ஒருக்கா வாரும்.

ராச: [நாணை அனுங்கலில்] ம் கூ...இப்ப வேண்டாம்...... நானே சம்மதிச்சிட்டன். பேந் தென்ன அவசரம். இனி எப்ப வேணுமெண்டாலும் இஷ்டம் போல நடக்கலாம். ஆனா...

சிவ: என்ன, சொல்லும், சொல்லும்.

ராச: நாங்கள் உங்களிட்ட வேண்டின முதலையும் வட்டி யையும்......

சிவ: அதை இப்ப உம்மட்ட ஆர் கேட்டது?

ராச: அதுக்கில்லை. நான் யோக்கியகாறியெண்டு உங் கட சம்சாரத்திட்டக் காட்ட வகை செய்யவேணும்.

சிவ: அதுக்கு...?

ராச: உங்களுக்குத் தர வேண்டியதை வட்டியும் முத லுமாக நீங்களே இப்ப தந்தி யனெண்டால், அதை நான் அவவுக்குக் குடுத்துப் போட்டு உங்களோட......

சிவ: (கலகலத்துச் சிரித்து) வெரிகுட் ஐடியாதான். ராசம்மா, நீர் சரியான திட்டத் தோடதான் வந்திருக்கிறீர். எனக்கு இப்பிடித் தெரிஞ்சி ருந்தால் அப்பவே உம்மைக் கட்டியிருப்பன்.

ராச: இப்ப என்ன குறை ஞ்சு போச்சு? இனி எல்லாம் கட்டின மாதிரித்தான். கணக் காலை எடுத்துத் தாறியளே?

சிவ: அதுசரி இப்பவட்டி யும் முதலுமா எவ்வளவு வரு மதி?

ராச: ம்... வட்டியோட இப்ப எல்லாமா ஒரு ரண்டா யிரத்தி ஐந்நூறு தேறும்.

சிவ: [அநாயசமாக] அடபூ... இவ்வளவுதானே? (தூரநின்று) சரி இருந்து கொள்ளும், எடுத் துக் கொண்டு வாறன்.

ராச: (பலமாக) எக்கணம் செல்லம்மாக்கா வந்திடப் போறா சுணங்காமல் வாருங்கோ.

சிவ: (பெட்டி தறிக்கும் ஒலி. தாள்கள் எண்ணும் அனுங்கல். வந்தபடி) அவ வந்தா எனக்கு வழி தெரியும். இப்ப இதில எவ்வளவு இருக்கெண்டு பாரும்.

ராச: (தாள்கள் மடக்கி எண்ணும் ஒலி) ரண்டாயிரத்தி ஐநூறும் சரியாய் இருக்கு. மெத்தப் பெரிய உபகாரம்.

**எஸ். அகஸ்தியர்**

சிவ: (கேலியாகச் சிரித்து) என்ன, காசைத் தந்தோடன அம்பிடியே மடிக்க பொதுக்கி யிட்டீர்...மனிசிக்காறி வர நேரமிருக்கு. மெல்ல இப்படிக் கிட்ட வாருமன்.

ராச: (சிணுங்கி) சேச்சீ...நீங் கள் சரியான அந்தரவாறர். இப்ப என்ன அவசரம்?

சிவ: (நைந்து சிரித்து) அவ சரமில்லை... ஆனா...(அதிர்ந்து) ராசம்மா, என்ன ஏதோ ஒரு மாதிரி உம்மட முகம் கறுக் குது? என்ன சங்கதி, விருப்ப மில்லையோ?

ராச: இதென்ன கதை, உங் களுக்கு நான் இணங்கினதை உறுதிப்படுத்திக்காட்ட ஒரு தேத்தண்ணி வைச்சுத் தந் தால் சந்தோஷம்தானே?

சிவ: (அக்களித்து) நானும் நினைக்க நீரும் சொல்றீர். இனிப்பான இணக்கத்துக்கு இதுதான் நல்லது.

ராச: (போனபடி) இணங் காமல் இந்தளவு துணிவுனே? இருங்கோ சுறுக்காப் போட் டுக்கொண்டுவாறன்.

(குசினித் தட்டுமுட்டுச் சாமான்களின் ஒலி)

சிவ: (தனியாக) இனி என் பாடு குஷிதான். பணத்துக்குப் பணம், பெண்ணுக்குப் பெண். ராசம்மா ரண்டாயிரத்தி ஐந் நூறையும் வேண்டிப் பதுங்கி யடிக்கிறாள். வெறும்பேய்ச்சி. உவளுக்கே தெரியாமல் ரட்டிப் பாகக் கறக்க எனக்கல்லோ தெரியும்... (சபலமாக) இது ஐயாத்துரைக்குத் தெரிஞ்சால்? (கெக்கலித்துச் சிரித்து) சங்கதி தெரியமுந்தி ஆளைத் தீட்டி விட்டால் சரி, பிறகு ராசம் மாவையே வைச்சிருக்கலாம்.

ராச: [வந்தபடி] என்ன, என் நாமத்தையே ஓதிக் கொண்டிருக்கிறியள்?

சிவ: [சிரித்து] தெரியாதா, ஒரு பண்டத்தில ஆசை வைச் சால் அதைத் தின்னுமிறவரை அதின்ர நினைவாகத்தானே மனசுபோகும்?

ராச: சரியாத்தான் சொன் னீங்கள். மனசில ஒண்டு நினைச்சால் அது முடியும்வரை அதே நினைவாய்த்தானிருக்கும். (சிரித்து) சரி, இனி அந்தரப் படாதையுங்கோ இந்தாருங்கோ தேத்தண்ணி...

சிவ- உமக்கு?

ராச: அந்தரத்தில ரண்டு கோப்பை இருக்கிறதும் உங் களுக்குத் தெரியேல. ஒண்டு உங்களுக்கு; மற்றது எனக்கு.

சிவ: (சிரிப்புடன்) எனக்குப் பச்சைக் "கப்" தேத்தண்ணி தான் வேணும்.

ராச: ஓ யேஸ்: விருப்பமா னதை எடுத்துக்கொள்ளுங்கோ

சிவ: சரி, கொண்டுவாரும் [தேநீர்க் கோப்பை வாங்கும்- சுவைக்கும் ஒலி] ச்சா, மலை யாளி தோத்துப்போவான். உண்மையிலே அச்சா. இந்தத் தேத்தண்ணிச் சுவையே உமது நெஞ்சிலிருக்கிற இன்பத்தைக் காட்டுது. சத்தியமாக (திகில் கொண்டு) தேத்தண்ணி தித் திப்பாய்த்தானிருக்கு... அடித் தொண்டைக்க கசப்பாக என்னவோ மாதிரியிருக்கு—

ராச: [அடக்கிச் சிரித்து] கடைசியில கசக்குதோ?

சிவ: ஓம் ராசம்மா மோசமாக் கசக்குது... [மாறித் துப்புதல்].

ராச: [அழுத்தமாக] சிவலிங்கமண்ணை, [வெகித்துச் சிரித்தபடி], நீ இப்பகுடிச்சியே அது தேத்தண்ணியல்ல; நஞ்சு

சிவ: [மலரடித்து] ஆ. ஆ

ராச: [ஆக்ரோஷமாக] ஓம். உனக்கு நான் போட்ட பாஷாணம்

சிவ: (ஆவேசமாக அலறி) ஆ.... கொடிய பாதகி... என் னடி செய்தனி... [தூரத்தே இடைவிடாது அலறி ஓங்காரிக்கும் ஒலி]

ராச: [ஆவேசித்துச் சிரித்த படி] ...டுவா ஆரடா பாதகி? என் புருஷனை வியாபாரத்தில வஞ்சித்து நீ கோட்டை கட்டி விட்டு, நடுத்தெருவில விட்டதும் காணாமல், வட்டி கறந்து எங்களைக் குட்டிச்சுவராக்கின வாதகா. எங்களிடம் திருடிய செல்வத்தையே எனக்குக்காட்டி என் வாழ்க்கையையே நாசமாக்க வந்த துரோகி,

சிவ: [சத்தமாக] அ... எடி துரோகி... ஆசை காட்டி மோசம் செய்த பாசாங்குக் காரி...

ராச: [சத்தமாக] நீதான்ரா ஆசை காட்டி மோசம் புரிய வந்த வம்பன்... பத்தினியைப் பெண்டாள வந்தசண்டாளன்.

சிவ: எடி ய... நீ... கொலை காறி... கொலை...

ராச: சீ நாயே, உன் மனச் சாட்சியே உன்னைக் கொலை செய்து தீர்ப்பு அளித்துவிட் டது பெண்ணான நான்வேறு "சதி" புரிந்து கொலை செய்ய வேண்டுமா? தூ...

சிவ: [ஆசுவாசமாக] அப் போ... நஞ்சு... பாஷாணம்...

ராச: அது நஞ்சுமில்லை பாஷாணமுமில்லை; கூமத்தஞ் சாறு அறிவு தெளிந்த பிறகு போ...

சிவ: [உரத்தகுரலில்] கத் தமி... பத்தினி...

[இசை—முற்றும்]

[கதை-பெயர்கள் கற்பனை]

## மக்கள் தொடர்பில்— முன்னணியில் ஜப்பான்!

உலக நாடுகளில் ஜப்பான் "மக்கள் தொடர்பு சாதனங்களில்" முன்னணி வகிக்கிறது.

நாடுமுழுவதிலும் ஜப்பானிய மொழி மட்டுமே பேசப்படுவதாலும், ஜப்பானிய மக்கள் பெரும்பாலானோர்கள் கல்வி கற்றவர்களாயிருப்பதனாலுமே இங்கு மக்கள் தொடர்பு சாதனங்கள் முன்னணி வகிக்கின்றன.

கடந்த சில வருடங்களாக ஜப்பானிய மக்கள் தொடர்பு சாதனங்களில் முன்னர் முக்கிய இடத்தை வகித்த வானொலியைப் பார்க்கிலும்; டெலிவிஷன் மிக முக்கிய இடத்தை வகித்து வருகிறது.

ஜப்பானில் நூற்றுக்கு மதிகமான நாளேடுகள் வெளிவருகின்றன. இவற்றில் அநேக பத்திரிகைகள் நாடு முழுவதும் விற்பனையாகின்றன. இவற்றில் ஜப்பானிய மக்கள் சராசரியாக 2 நாளேடுகளை வாங்குகிறார்கள்.

உலகில் 3-வது அதிக பிரதிகள் விற்பனையாகும் நாளேடு ஜப்பானில் உள்ளது.

1824-ம் ஆண்டு ஜப்பானில் வானொலி அறிமுகப் படுத்தப்பட்டபோது 3,500 பேர் மட்டுமே வானொலி பாவனையாளர்களாக இருந்தார்கள். இப்போது நாடு முழுவதும் 938 ஒலிபரப்பு நிலையங்கள் இயங்கிவருகின்றன.

1960-ம் ஆண்டு உலகில் இரண்டாவதாக ஜப்பானில் வர்ண டெலிவிஷன் அமைக்கப்பட்டது.

இப்போது ஜப்பானில் 80 வீதமானோர் வீடுகளில் டெலிவிஷன் மூலம் நிகழ்ச்சிகளைப் பார்த்து ஆனந்திக்கிறார்கள்.

(ஜப்பான் நியூஸ்)


உன்னத சௌகர்யம் தரும்

பாட்டா-தமது புத்தம் புதிய
வினோதமான - சுப்பர் மெனிக் - செருப்புக்களை
வழங்குகிறது . . . . நளின, வண்ண வண்ண
மேற்புறமும், அழகான உயர்ந்த குதியுமுடையவை -
மிகவும் இலேசானவை. நீங்கள்
வெறுங்காலுடனேயே இருப்பதாக
நினைப்பீர்கள் . . . . உன்னத
சௌகர்யம் - உன்னத
செருப்புக்கள் . . .
சுப்பர் மெனிக்
பாட்டா தருவது




சுப்பர் மெனிக் 47
அளவுகள் 3-7

சுப்பர் மெனிக் 41
அளவுகள் 3-7

சுப்பர் மெனிக் 58
அளவுகள் 3-

பாட்டா
சுப்பர் மெனிக்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ராதா நடித்த
சித்தி

Regal Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
MICHAEL CAINE
in
The Romantic English Woman
(Color)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்-Adults only)
From 6-3-78
MACISTE IN THE VALLEY OF KINGS

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார் நடித்த
மேயர் மீனாட்சி

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - பத்மினி
காட்டு ரோஜா

லிடோ போன் 7693
(யாழ். நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்

கடைசி வாரம்
வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
❀ கமலஹாசன் ❀ ரஜனிகாந்த்
❀ எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

இன்று மட்டும்
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பஷிராஜாவின்
மரகதம் சிவாஜி—பத்மினி நடித்த
(புதிய பிரதி)

ஞாயிறு (5-3-78) காலை 8-30 மணிக்கு மட்டும்
THE TALE OF A LITTLE HUNCH
BACK HORSE

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

''பறவாயில்லை, கோட்டிலை வழக்கு வென்டால் நஷ்ட ஈடாய் ஒரு இருபதினாயிரம் ஆவது தருவாங்கள். அதிலை கமலாவின்ரை கலியாணத்தை முடிச்சுப்போடலாம்'' என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டார்.

எப்படியும் கடவுள் என்ரை பக்கம்தான நிப்பர்' என்ற நம்பிக்கையோடு கோட்டில் நின்றார், ரத்தினத்தார். சாட்சியங்கள் சாதகமாய் இல்லை.

இரத்தினம் என்பவர், தன் வண்டியைப்பிழையானபாதையில் செலுத்தி, கனகரத்தினத்தின் காரின் மீது மோதிக் காரைச் சிதைத்ததற்கு நஷ்ட ஈடாகப் பதினையாயிரம் ரூபாவும், றோட்டில் பிழையான பாதையில் வண்டியைச் செலுத்தியதற்கும், அதிக பாரம் ஏற்றியதற்கும் அபராதமாக ஐயாயிரம் ரூபாவும் கட்டும்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

வானமே இடிந்து தலையில் விழுந்தாற்போல் கதிகலங்கினார் ரத்தினத்தார். அவர் கட்டிய கோட்டைகள் தரைமட்டமாக்கப்பட்டு, அக்கோட்டையின் ஒவ்வொரு கல்லும் பொடிப்பொடியாகப் பறப்பது போல்தெரிந்தது. அப்புழுதிப் புகாரின் ஊடே கமலாவின் தாலியற்ற கழுத்து, சரசுவின் எதிர்காலம் எல்லாம் புழுதி படிந்து மூளியாகத் தெரிந்தன. (யாவும் கற்பனை)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45,
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - விஜயா
நெஞ்சிருக்கும்வரை

Rio Daily 4 shows
Jaffna (Phone: 7607)
COWBOY THRILLER
Ramon the Mexican

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி; 6-45, 10-00
ஜெய்சங்கர் நடித்த
துணிவே துணை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி; 6-30, 9-30
சனி, ஞாயிறு; 2-30,
சிவகுமார் — ஜெயசுதா
பட்டிக்காட்டுராஜா

நாகவிகாரை தாக்கப்பட்ட

# வானொலி செய்தியையும் அதிகாரிகள் பார்த்தனர்

## கான்ஸ்டபிள் குமாரசாமி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து வானொலி மூலம் அனுப்பப்படும் தகவல்களை ஒவ்வொருநாளும், பொலிஸ் சிரேஷ்ட அதிகாரிகள் பார்வையிடுவார்கள். அதில் அவர்கள் தராததகவல்கள் ஏதும் இருந்தால், வானொலி ஒப்பரேட்டர் மீது உடன் நடவடிக்கை எடுப்பார்கள்'', சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த கான்ஸ்டபிள் குமாரசாமி மேற்கண்டவாறு கூறினார்.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம்: நாகவிகாரை தாக்கப்பட்டது என்று அனுப்பிய தகவலையும், உயர் அதிகாரிகள் பார்வையிட்டனர்? ஆம்.

சட்: அத்தகவல் அனுப்பியது உண்மை என்றபடியால் பேசாமல் இருந்தனர்?-ஆம்.

சட்: உயர் அதிகாரி சொல்லாமல் அத்தகவல் அனுப்பப்பட்டிருந்தால் வானொலி ஒப்பரேட்டர் மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள்?-ஆம்,

சட்: அப்படி ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை?-இல்லை

சட்: ஆதலால் அத்தகவல், உயர் அதிகாரிகள் சொல்லி அனுப்பப்பட்டது உண்மை?-ஆம்.

சட்டத்தரணி அண்டலூட் மணிவாசகம்: அன்று குருசாமி உம்முடன் இருந்தார்?- ஆம்.

சட்: எத்தனை நிமிடம்?-15 நிமிடம்.

சட்: வெளியே போனாரா?-போய்வந்தார்.

சட்: எப்போது?- முதல் தகவல் கொடுத்தபின்-

சட்: எந்த நேரத்தில்?-நான் வானொலி அறைக்குப் போய் வந்தபின்.

சட்; பொலிஸ்மா அதிபரிடமிருந்து ஒரு தகவல் வந்தது?-ஆம்.

சட்: தகவல் எத்தனை மணிக்கு வந்தது?- 11-20.

சட்: நிலைமை மோசமாகிவிட்டது. காயப்பட்டவரை கொழும்புக்குஉடனேகொண்டு வர விமானம் வேண்டும் என்ற தகவல் அனுப்பப்பட்டது?-ஆம்.

சட்: இச்சமயத்தில் ஓட்டுமடத்தில் சுடப்பட்ட இரு கான்ஸ்டபிள் பற்றி விளக்க வேண்டும். ஓட்டுமடத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டை பண்ணை என மாற்றினார்கள். ஏனென்றால் பண்ணையில் பொலிஸ் விடுதி உண்டு. பொலிஸ் அதிபர் விருப்பப்படி இடமாற்றப்பட்டதாக முன்பு இங்கு கூறப்பட்டது.

கௌரவ கமிஷன் அவர்கள் இதனை அறியவேண்டும் ஓட்டுமடத்தில் நடந்த சூட்டுச்சம்பவம் பண்ணையாக வேண்டுமென மாற்றப்பட்டது அதற்கும் இந்த வானொலித் தகவலுக்கும் தொடர்புண்டு. பொலிசார், காயமடைந்ததாகத் தெரிவித்து அவர்களை அனுப்ப விமானம் கேட்கப்பட்டது. அவர்கள் விமானத்திலா காரிலா அனுப்பப்பட்டார்கள் என்று தெரியாது.

சட்: பண்ணையில் பொலிஸ் விடுதி உண்டு? ஆம்

சட்: காயமடைந்த கான்ஸ்டபிள்கள் மானிப்பாயில் இருப்பவர்? ஆம்.

சட்: மானிப்பாய் செல்லும் வழியில் ஓட்டுமடத்தில் சூட்டுச்சம்பவம் நடந்தது? ஆம்.

சட்: பண்ணை வேறு பக்கத்தில் இருக்கிறது? ஆம்.

(க-இ)

# கூடு நீயென்று ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அருள் செய்ய வேண்டும் என்னும் கருத்து ''குழைத்துடன் கூடலார்'' என்ற வரியில் வலியுறுத்தப்படும் நயத்தைக் காணலாம்.

'மன்னுகி நின்ற மதிசூதனனை'' தன் காதலனைக் கொண்டு மகிழ்ந்தவள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் ஆண்டாள். அவர் கூடற்குறிப்பு என்ற தலைப்பில் பத்து பாடல்களைப் பாடியுள்ளார் அதனுள் ஒரு பாட்டினை இங்கு நோக்குவோம். மதிசூதனனுக்குரிய பல நாமங்களில் கோவலன் என்பதும் ஒன்று அந்த நாமம் அவன் கன்று மேய்த்து விளையாடிய அந்தப் பருவத்தை நினைவூட்டும், துவாரபதிக் காவலனுகிச் சிலகாலம் வசித்தார். அவர் தம்மையடைய வேண்டும் அவளும், தன்மீது அன்புடையார் மனத்தன்றி, மற்றையோர் மனத்து சென்று சேரமாட்டார். அப்படியான இறைவர் தம்மிடம் வருவாரானுல் கூடவேநீ கூடு என்று ஆண்டாள் பாடுகிறார்.

''ஆவலன்புடையார்
தம்மனத் தன்றி
மேவலன் விரைசூழ்
துவாராபதிக்
காவலன் கன்று
மேய்த்து விளையாடும்
கோவலன் வரிற்கூடிடு
கூடலே''

திருமருகல் என்பது ஒரு சிவஸ்தலம். அங்குள்ள பெருமானை ஒரு பேதைப் பருவத்துப் பெண் கண்டாள். அவளுக்கு அப்பெருமான் மீது காதலுண்டாயது. அந்தஇறைவன் வலம் வரும்போது போய் வீதி அருகில் நிற்பாள். நெஞ்சுள் அப்பெருமான் வடிவம் நினைந்து உருகுவாள் அந்த மயக்கத்தோடுஓடிச்செல்வாள். அப்பெருமான் தன்னிடம் வரமாட்டாரா என்று கூடல் இழைத்துப் பார்ப்பாள். இச்செயல்களையெல்லாம் அப்பேதைப் பெண்ணினது தாய் பார்த்துச்சொல்வதாக, நாவுக்கரசு சுவாமிகள் திருமருகற் பெருமான மீது பதிகம் பாடியுள்ளார்:

''நீடுநெஞ்சுள் நினைந்துகண்
ணீர்மல்கும்
ஓடு மாலினோடொண்
டொடி மாதராள்
மாடம் நீண்மருகற்பெரு
மான்வரில்
கூடு நீயென்று கூடல்
இழைக்குமே''

# பண்ணிசை விழா

(யாழ்ப்பாணம்)

சிவநெறிக்கழகத்தின் பண்ணிசை விழா இன்று காலை கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் பண்டிதர் திரு. இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறுகின்றது விழாவில் நடைபெறும் பண்ணிசைப் போட்டியில் நகரின் பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் பங்கு கொள்கின்றன.

# கி. பி.1900....

[5ம் பக்கத் தொடர்ச்சி]

திகதிகள் 1976 ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி வரும் தினமான வியாழக் கிழமையிலேயே வருகின்றன. எனவே ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி வியாழன், 13ம் திகதி வெள்ளி என்ற வரிசைக் கிரமப்படி ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வருகின்றது. ஆகவே 1976ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி வரும் தினம் ஞாயிற்றுக்கிழமையே ஆகும்.

தயாரித்தளித்தவர்;
'தெல்லியூர் இன்பம்'
இ. பேரின்பநாயகம்,
சுரேஸ் வாசா,
பலாலி,
காங்கேசன்துறை.

ராணி தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-30, 9-45
யாழ்ப்பாணம்
ஜெய்சங்கர் ஜெய்சித்ரா தங்கவேலு அசோகன்
மனோகர் வி. எஸ். ராகவன் சகுந்தலா தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்த



பணக்கார பெண்
டைரக்ஷன்: ப. ராஜேந்திரன்

# யாழ். முஸ்லிம்கடைகளுக்கு பொலிஸார் தீமூட்டினர்கள்

## அஜந்தா ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

**"யாழ்ப்பாணம் பஸாரிலுள்ள முஸ்லிம் கடைகளுக்கு, பொலிஸார் பெற்றோலை ஊற்றித் தீ வைத்தார்கள்.**

**"வீதியில் வந்தவர்களைப் பொலிஸார் விரட்டி, றைபிளால் அடித்து உதைத்துக்கொண்டிருந்தார்கள்,**

"எனது கடை தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தபோது, ஓடோடி வந்த நான், கடற்படையினரதும், பொதுமக்களினதும் ஒத்துழைப்புடன் தீயை அணைத்தேன்.

"பொல்காவலையிலுள்ள என் கடைக்குள், கலவர நேரத்தில் புகுந்துகொண்ட சிங்களவர் ஒருவர் அங்குள்ள தமிழ் வேலையாட்களை விரட்டியடித்துவிட்டுத் தானே வியாபா செய்துவருகிறார்.

யாழ்ப்பாணம் அஜந்தா ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் சண்முகம் சிவஞானம் நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று விசாரணையைப் பார்ப்பதற்கு ஏராளமான மாணவிகள் வந்திருந்தனர்.

சண்முகம் சிவஞானம் மேலும் கூறியதாவது:

மின்சார நிலைய வீதியில் என் ஜவுளிக்கடை இருக்கிறது. ஆகஸ்ட் 16ந் திகதி காலை 8 மணிக்கு வந்தேன். கலவரம் நடப்பதாகவும் கடையைத் திறக்கவேண்டாமெனவும் அங்கு திரண்டிருந்த மக்கள் கூறினார்கள். 2, 3 கடைகள் திறந்திருந்தன. மற்றக்கடைகள் திறக்கவில்லை. அப்போது பொலிஸ் றக் ஒன்று வந்து நின்றது அதிலிருந்து பொலிசார் றைபிளுடனும் பட்டன் பொல்லுடனும் வந்து கூடி நின்ற மக்களை பட்டனால் அடித்தார்கள்.

### பொலிசார் பெட்றோல் ஊற்றிக் கொழுத்தினர்

நான் கடையைப்பூட்டிவிட்டு தபால்பெட்டி துவாரத்தினூடாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். பொலிசார்கடைகளுக்கு பெட்றோல் ஊற்றிக்கொழுத்திக்கொண்டிருந்தார்கள். அப்பகுதியில் முஸ்லிம் கடைகள் பெரும்பாலானவையாக இருந்தன அதன்பின் பொலிசார் ஆஸ்பத்திரிப்பக்கம் போனார்கள். அங்குவந்த பொலிசார் சிலர் யூனிப்போம் அணிந்திருக்கவில்லை. நம்பர் அணிந்திருந்தார்களோ தெரியவில்லை.

கடையில் வெக்கை தாங்காமல், கடையைத் திறந்துகொண்டு ஜும்மா ஒழுங்கைப் பக்கமாக ஓடி ஒரு மேல் மாடியில் ஏறினேன். பொலிசார் தொடர்ந்து மக்களை விரட்டி பட்டனால் அடித்தனர். 12 மணிவரை மேல் மாடியில் இருந்தேன். பின் கடையைப் பூட்டிவிட்டு வீட்டுக்குப் போய்விட்டேன்.

அடுத்த நாள் கடைக்கு வரவில்லை. வீட்டிலிருந்தபோது எனது கடை எரிவதாக அறிந்தேன். வந்து பார்த்தபோது அங்கு கடற்படையினர் நிற்பதைக் கண்டேன். என்ன செய்யவேண்டுமென்று கேட்டனர். மக்களை அப்புறப்படுத்தினால் தீயை அணைக்கலாமென்றேன். அதற்குப் பிறகு கடற்படையினருடனும், மக்களின் உதவியுடனும் தீயை அணைத்தேன். எனக்கு 20,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது. அதில் 2 கடைகள் தவிர தையற்கடை உட்பட சகல கடைகளும் எரிந்து சாம்பராயின.

பொல்காவலையில் எனக்குச் சொந்தமாக ஒரு கடையுண்டு. அதை ஒரு தமிழருக்கு வாடகைக்குக் கொடுத்திருந்தேன். கலவரத்தின் போது அவரை விரட்டிவிட்டு சிங்களவர் ஒருவர் வியாபாரம் செய்யத் தொடங்கிவிட்டார். கடையைத் தரமறுக்கிறார்.

### குருநாகல் செல்ல பயமாயிருக்கிறது

நான் வீடமைப்பு இலாகாவிற்கும் வாடகைச் சபைக்கும் புகார் செய்தேன். அவர்கள் குருநாகல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருமாறு கூறினர், குருநாகல் செல்வதற்கு எனக்குப் பயமாய் இருக்கிறது. அதனால் நான் போகவில்லை.

(ச-இ)

## பறைத்தமிழா—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சென்றதாகவும் பின் அங்கிருந்து வவனியாவுக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறினார்.

19ந் தேதி காலை வவனியா ஆஸ்பத்திரியில் ஏ. ஜீ. ஏ. சந்தித்தார்.

### 2 நாள் கழித்தே மருந்து கட்டினர்

என் கணவர் காயமடைந்தது 17ந் தேதி இரவு. அவருக்கு முதன்முதல் மருந்து கட்டியது 2 நாள் கழித்து 19ந் தேதி வவனியா ஆஸ்பத்திரியில்தான் மருந்து கட்டினார்கள்.

என் கணவரின் சகோதரரான பாலசுப்பிரமணியம் ஒரு கார் அனுப்பிவைத்தார். அக்காரில் என் கணவரை யாழ்ப்பாணம் கொண்டுவந்தேன். 20ந் தேதி 5 மணிக்குத்தான் யாழ்ப்பாணம் வந்தோம். ஊரடங்குச் சட்டம் இருந்ததால் உடனடியாக யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கமுடியவில்லை.

அதனால் தனிப்பட்ட டாக்டர் எஸ். யோகநாதனிடம் காட்டினேன். அவர் வலியைச் சுகப்படுத்த "பில்ஸ்" கொடுத்தார்.

### கணவரின் உயிர் பிரிந்தது

20ந் தேதி நள்ளிரவு 12-30 மணிக்கு என் கணவர் மூச்சவிடமுடியாமல் கஷ்டப்பட்டார்: எங்களை விட்டுப்பிரிந்தார் கணவர் உயிர் பிரியும்போது அவருக்கு 54 வயது. உயிருடனிருந்தால் இன்னும் 4 வருடம் வேலைபார்த்திருக்க முடியும்."

# டாக்டருடன் காதல்: நர்ஸ் தற்கொலை!

## யாழ். தாதிகள் விடுதியில்சம்பவம்

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவருக்கும் இளம் தாதி ஒருவருக்குமிடையேயான காதல் விவகாரத்தில் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து மட்டக்களப்பைச் சேர்ந்த அந்தத் தாதி தாதிகள் விடுதியில் தமக்குத் தாமே நச்சுத்திராவகத்தை ஏற்றி தற்கொலை செய்துகொண்டார்.

28 வயதான செல்வி மார்க்கரெட் ஜோன் என்ற தாதியே ஊசிமூலம் நச்சுத்திராவகத்தை தமது உடலில் ஏற்றி தற்கொலைசெய்துகொண்டார்.

யாழ். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் விசாரணை நடத்தினார்.

விசாரணையில்போது கண்ணீருடன் சாட்சியமளித்த காதலரான டாக்டர் மாணிக்கம் ரவீந்திரன் கூறியதாவது:

இறந்தவர் 1976ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 10ம் வார்ட்டில் கடமையாற்றினார் நானும் அதே வார்ட்டில் பணிபுரிகிறேன். இவரை நான் கடந்த 10 மாதங்களாகக் காதலித்துவந்தேன். எமக்கிடையில் அடிக்கடி வாக்குவாதம் நிகழ்வதுண்டு. நான் எல்லாப் பெண்களுடனும் சரளமாகப் பேசுவதாகவும், ஒருவருக்கு மனைவியாகின்ற பக்குவம் அடைந்தபின் இப்படி நடக்கக்கூடாதெனவும் எச்சரித்தார். நான் அவரை நிச்சயமாக மனைவியாக ஏற்றுக்கொள்வேன் எனப் பல முறை உறுதியளித்துள்ளேன்.

சம்பவம் நடைபெற்ற தினத்திற்கு முதல் நாளும்! எச்சரித்துவிட்டு எனக்கு வழி தெரியுமென்றார், 'இச் சாட்சியம் கடிதமூலம் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து டாக்டர் முத்தையா கனகராஜா பிரேத பரிசோதனை நடத்தினார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [கெ:இ]

# அனுராதபுரம் ஆஸ்பத்திரி லிகிதர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

அனுராதபுரம் ஆஸ்பத்திரி லிகிதர் பிரான்சிஸ் விஜயரத்தினம் பாலரத்தினம் சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"ஆகஸ்ட் 17ந் திகதி காலை 9 30 மணிக்கு நான் வைத்திய அத்தியட்சகர் காரியாலயத்தில் இருந்தேன். அப்போது அமெரிக்க டாக்டர் தவபாலசிங்கம் குடும்பத்துடன் அங்கு வந்தார். என்ன நடந்ததெனக் கேட்டேன். திருக்கோணமலையிலிருந்து திரு.வாமதேவனுடன் வாடகைக் காரில் வந்ததாகவும், யாழ்தேவியில் யாழ்ப்பாணம் போவதற்கு அனுராதபுரம் ரயில்நிலையத்திற்குச் சென்றபோது குண்டர்கள் தாக்கிக் கொள்ளையடித்ததாகவும் சொன்னார்.

"தனது பாஸ்போர்ட் மற்றும் பயண தஸ்தாவேஜுக்கள் தொலைந்துவிட்டதாகவும் சொன்னார். அவர் மனைவி சற்று ஓய்வெடுக்க விரும்பியதால் அங்கு வந்தார் அப்போது டாக்டர் கனகேஸ்வரன் அங்கு வந்தார். அவர்களைத் தெரியுமென்றும் பயணத்திற்கு ஏற்பாடு செய்யும்வரை தன்னுடன் தங்கியிருக்கலாமென்றார். அதன் பின் அவர்களை டாக்டர் கனகேஸ்வரன் தன் வீட்டிற்குக் கூட்டிச் சென்றுவிட்டார்.

"நாங்கள் கந்தோரில் இருந்தபோது சக ஊழியர் பி. ஏச். அல்பேர்ட் தொலைபேசியில் யாருடனோ பேசினார். 'இனக் கலவரம் அனுராதபுரத்தில் ஆரம்பித்துவிட்டது. கொழும்பில் எப்படி? என்று கேட்டார். நாங்கள் நகரத்தில் கலவரம் ஆரம்பித்துவிட்டதை அறிந்தோம். ஆஸ்பத்திரியில் சகல பாதுகாப்பும் உண்டென்றார் அல்பேர்ட். அவர் வெளியில் போய்விட்டு வந்தார். கொள்ளையடிக்கிறார்கள் என்றார்.

"எங்கள் வீடு கொள்ளையடிக்கப்பட்டதாகச் சொன்னார். நீர் எங்களுடன் இருக்கிறீர். அரை மைலுக்கு அப்பாலுள்ள வீடு கொள்ளையடிக்கப்பட்டதென எப்படித்தெரியுமெனக் கேட்டேன். பதில் சொல்லாமல் போய்விட்டார்.

'இது இனக் கலவரமில்லை, கொள்ளைதான்' என்று அவர் கூறினார்.

இக்கட்டத்திலிருந்து திரு. பாலரத்திலம் இரகசியமாகச் சாட்சியமளித்தார். பத்திரிகை நிருபர்கள் உட்படச் சகலரும் வெளியேற்றப்பட்டனர். [கஇ]


## மீனவர்களுக்கு ஓர் அறிவித்தல்

குறுலோன் கயிறு 2 MM தொடக்கம் 12 MM வரை

(கம்பாயம்) கப்பலில் ஜப்பானிலிருந்து வருகின்றது. ஏமாற்றத்தைத் தவிர்க்க மீனவர்களையும், சங்கங்களையும் முற்காசுகட்டி ஓடர் செய்யுமாறு வேண்டுகிறோம்.

சூடைவலைகள்

சூடைவலைகளும் இனிமேல் தனித்தனியே மீனவர்களுக்கு விற்கப்படும். உங்கள் அட்டைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

வர்த்தக முகாமையாளர்
சீ-நோர்
குருநகர்.

8675



### தேவை

நெசவு வேலையில் நன்கு அனுபவமுள்ளவர்களும், நெசவு வேலை பழகவிரும்பும் பெண்பிள்ளைகளும் தேவை. தகுதிக்கேற்ற சம்பளமும், தங்கும் வசதிகளுமுண்டு. விண்ணப்பிக்கவும். அருணகிரி இன்டஸ்றிஸ், 42 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 8642,



## நன்றி

25-2-78ல் நடைபெற்ற எங்கள் அன்புத் தாயாரின் இறுதிச் சடங்கின்போது நேரில் வருகைதந்து, அனுதாபம் தெரிவித்து, நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட உறவினர்கள்' நண்பர்களுக்கும் தந்தி, தபால் மூலம் எங்களுக்கு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த உறவினர், நண்பர்களுக்கும் நானும் எங்கள் குடும்பத்தினர்களும் எங்கள் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வேலணை வீரசிங்கம்

"தமிழ் மனை,"
வேலணை-5
3-3-78

8682



## சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

# டொலர்

## அலுமினியம்


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 5 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389. Registered as a Newspaper in Srilanka